# என்ன நினைக்கிறாய்!

பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்த அந்தச் சிறுவன், சாலை ஓரம் நின்றிருந்த அழகான காரைப் பார்த்தான். அதன் அருகே சென்று, அதைத் தொட்டு ரசித்தபடி நின்றான்.

'தம்பி, என்ன செய்கிறாய்?' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒருவர் நின்றிருந்தார். அவர் கையில் ஒரு சாவி இருந்தது. ''இந்த காரின் அழகை ரசித்துக்கொண்டிருந்தேன்' என்றான் சிறுவன். 'உனக்கு இதில் சவாரி செய்ய ஆசையா? நீ எங்கே இறங்க வேண்டுமோ, அங்கே இறக்கிவிடுகிறேன்' என்றார் அவர். சிறுவன், உற்சாகத்துடன் காரில் ஏறிக்கொண்டான். கொஞ்ச தூரம் சென்றதும் ''உங்கள் கார் மிகவும் அருமையாக இருக்கிறது. இதன் விலை என்ன?'' என்று கேட்டான் சிறுவன்.

'10 லட்சம். ஆனால், இதை நான் வாங்கவில்லை. இது, என் சகோதரன் எனக்குப் பரிசாக அளித்தது'' என்றார்.



''ஓ... நீங்கள் கொடுத்துவைத்தவர். உங்கள் சகோதரர் மிகவும் நல்லவர்'' என்றான் சிறுவன்.

அதன் பிறகு, சிறுவன் அமைதியாக வந்தான். அவன் இறங்கவேண்டிய இடம் வந்தது. நன்றி சொல்லிவிட்டு இறங்கினான். ''ஏன் மௌனமாகிவிட்டாய்? நீ மனதில் என்ன நினைத்தாய் எனச் சொல்லவா? என் சகோதரனைப்போல ஒரு சகோதரன் உனக்கும் வேண்டும் என்றுதானே நினைத்தாய்?' என்று புன்னகையுடன் கேட்டார் அவர்.

அதற்கு அந்தச் சிறுவன், 'இல்லை சார். நானும் உங்கள் சகோதரனைப்போல பிறருக்குப் பரிசு அளித்து மகிழும் அளவுக்கு உயர வேண்டும் என நினைத்தேன்' என்றான். வியந்துபோன அவர், 'நிச்சயம் அந்த நிலைக்கு நீ உயர்வாய்' என வாழ்த்திவிட்டுச் சென்றார்.